2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். எல்லோருக்கும் பேச வாய்ப்பு உண்டு.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அரசுப் பள்ளிகளில் பயின்று, 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டின்மூலம் தொழிற்கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் அரசுக்குச் சாதகமாக வெளியான தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.*

நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கடந்த ஆண்டுகளின் மாணவர் சேர்க்கை விவரங்களின்படி, அரசுக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்னிலை வகிக்கும் சுயநிதிக் கல்லூரிகளில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் சேர்க்கை பெற்று வந்த சூழ்நிலையில், இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன்.

முற்பகல் 11–20

அதன் அடிப்படையில், அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளித்திட மாண்பமை டெல்லி உயர் நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு. த. முருகேசன் அவர்கள் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் அளித்த அறிக்கையின்படி, அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, அனைத்து இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும் 7.5 விழுக்காடு

இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, அரசால் 2021 ஆம் ஆண்டு, "தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்" இயற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையிலான பொறியியல் படிப்புக்குத் தேர்வு செய்யப்பட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சேர்க்கை ஆணைகளை வழங்கும் விழாவில் கலந்துகொண்டு, "அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடுமூலம் தொழிற்கல்லூரிகளில் சேரக்கூடிய மாணவர்களுடைய, அதாவது, பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கு ஆகக்கூடிய செலவு, கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளும்" என்ற அறிவிப்பினை நான் வெளியிட்டேன்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, இதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தவகையில், படிப்புக் கட்டணம் வழங்குவதற்காக 45 கோடியே 61 இலட்சம் ரூபாயும், விடுதிக் கட்டணத்திற்காக 25 கோடியே 32 இலட்சம் ரூபாயும், போக்குவரத்துக் கட்டணத்திற்காக, 3 கோடியே 35 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 74 கோடியே 28 இலட்சம் ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் கல்வியாண்டில், 7 ஆயிரத்து 876 மாணவர்கள் சேர்க்கை ஆணை பெற்றிருக்கிறார்கள். 17–2–2022 வரை 6,100 மாணவர்களுக்கான கட்டணமாக 38 கோடியே 31 இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சூழ்நிலையில், 7.5 விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் அரசு ஒதுக்கீட்டில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுடன் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் பல்வேறு பொதுநல வழக்குகள் தொடரப்பட்டு, இருதரப்பு வாதுரைகளும் முடிவுற்று, இன்று நமக்கு சாதகமான தீர்ப்பு வெளியாகியுள்ளது என்ற

மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்ற உறுப்பினர்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு, தரவுகளின் அடிப்படையிலும், முறையான கலந்தாலோசனை செய்யப்பட்டும் கொண்டு வரப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கு உயர் நீதிமன்றம் தந்துள்ள மிகப் பெரிய அங்கீகாரம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 10 மாத காலத்தில், சமூக நீதிக்கான சட்டப் போராட்டத்தில் கிடைக்கும் மூன்றாவது வெற்றி இந்தத் தீர்ப்பு என்பதைப் பெருமையுடன் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நீதியை மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் நிலைநாட்டி, நாட்டிற்கே வழிகாட்டும் வரலாற்றுக் கடமையை தமிழகம் தொடர்ந்து செய்திடும்.

திராவிட மாடல் ஆட்சி, அதற்காக அயராது உழைத்திடும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டின் தற்போதைய நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கல்வி, வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கான 10.5% இட ஒதுக்கீட்டின் தற்போதைய நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க